MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# சங்க இலக்கியத்தில் சொல்வழி-சொல் அல்லாத தகவல் தொடர்பு

**முனைவர் கு.வளர்மதி,**
**உதவிப்பேராசிரியர்,இளங்கலைத் தமிழ்த்துறை,**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,**
**சிவகாசி.**

DOI 10.5281/zenodo.18514430.

**Abstract**

Language possesses the unique characteristic of developing itself and also fostering the growth of the people who use it. Literature serves as a medium to illustrate the growth and excellence of a language. Language and communication through it form the foundation for all of these. Non-verbal communication can also be found in Sangam literature. This article aims to examine the verbal and non-verbal communication present in the Sangam Puram poems.

Key words :
Sangam Literature – Communications – Development – Language & Verbal

## முன்னுரை

மொழி தானும் வளர்ந்து, தன்னைப் பயன்படுத்தும் மனிதர்களையும் வளர்த்தெடுக்கும் தனித்தன்மையைப் பெற்று விளங்குகின்றது. ஒரு மொழியின் வளர்ச்சியையும் சிறப்பையும் உணர்த்துவதற்கும் இலக்கியம் ஊடகமாக உள்ளது. இவை அனைத்திற்கும் மூலதனமாக மொழியும் அதன்வழி தகவல் தொடர்பும் அமைகின்றன. சொல் அல்லாத தகவல் தொடர்பினையும் சங்கஇலக்கியங்களில் காணமுடிகிறது. சங்கப் புறப்பாடல்களில் அமைந்துள்ள சொல்வழி - சொல் அல்லாத தகவல் தொடர்பினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சொல்வழிதொடர்பு

தகவல்களைச் சொற்களாகப் பேச்சு வடிவிலோ எழுத்து வடிவிலோ தெரிவிக்கும் போது புறத்தொடர்பு நிகழ்கிறது. வாய்மொழிச்சொற்கள் அல்லது எழுத்துவழிச் சொற்கள் மூலம் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. சொல்வழி தொடர்பு உள்மனத்துள் அல்லாது புறத்தே வெளிப்படையாக நிகழ்ந்தமையால் அதனைப் புறத்தொடர்பு என்றும் கூறலாம். இதனை,

1. இரு நபர்களிடைத் தொடர்பு
2. குழுத் தொடர்பு
3. மக்கள் தகவல் தொடர்பு


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

எனமூவகைப்படுத்துவர்.[1]இந்தவகையில்சங்கப்புறப்பாடல்களில்மூவகைத்தகவல்தொடர்புகளும்காணப்படுகின்றன.

## இருநபர்களிடைத்தொடர்பு

தொடர்பியலில் மிகச் சிறப்பானது நேரிடைத் தொடர்பாகும். தகவலாளி செய்தியைச் சிறப்பாக வெளிப்படுத்தவும் பெறுநர் செய்தியை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் இது உதவி செய்கிறது. “நாம் ஒவ்வொருவரும் பிறிதொரு தனிநபருடன் அவரது ஐம்புலன்களும் ஒன்று அல்லது பலவற்றுக்கு ஒரு தகவலை அளிப்பதன் மூலம் தொடர்பு கொள்வதை இருநபர்களிடைத் தொடர்பு என்கிறோம்.”[2] இதனை இருவழித் தொடர்பு, நேரிடைத் தொடர்பு என்றும் கூறுவர். இத்தொடர்பு ஒருவருடைய வாழ்க்கையில் மிகுதியாக நடைபெறும்.

## குழுத்தொடர்பு

“குழுத் தொடர்பில் அதே நபர்கள் சான்றாக ஒரு குடும்பத்தினர், நிறுவனத்தார்அல்லது குழுக்கள் முறையில் ஓய்வுநேரத்தைக் கழிக்க, ஒரு பிரச்சினையைத் தீர்க்க அல்லது முடிவெடுக்க ஒன்று கூடுவர். இதுவே குழுத் தொடர்பாகும்” [3] என்பர். சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் ஐமபெருங் குழு, எண்பேராயம் போன்றவை குழுத் தொடர்புக்கு சிறந்த சான்றுகளாகும்.

## அரசனுக்கு உதவிய குழுக்கள்

அறத்தை நிலைநாட்ட மன்னர்கள் முற்பட்ட போது அவர்கள் தனிமனிதர்களாக மட்டும் செயல்படாமல் ஒரு குழுவை அமைத்து ஆலோசித்து சான்றோரின் அறிவுரை கேட்ட பின்பு நீதி வழங்குவர். இத்தகையவரைச் சங்கப்புலவர்கள் ‘பூத்தசுற்றம்’(பதிற்.90: 18, மதுரைக்.770) ‘செய்த மேவலமர்ந்த சுற்றம்’ (பதிற்:25:28) ‘தொலையாக் கொள்கைச் சுற்றம்’ (பதிற்.70:17), ‘உரும்பில் சுற்றம்’ (மலைபடு.550, பெரும்பாண்.447) என்னும் தொடர்களால் சுட்டுவர். புறநானூற்றில் குழுமுறை இருந்து அறநெறியில் செயல்படுவதை முரஞ்சியூர் முடிநாகராயர், “பால் இனிமையொழிந்து புளிப்பினும், சூரியன் ஒளிகுன்றி இருளி ஆழ்ந்தாலும், நான்கு வேதங்களின் நெறியானது நிலை திரிந்து மாறானாலும் எந்த வேறுபாடுமின்றி அறத்தின் வழியே செயல்படுவர்” என்று குறிப்பிடுகின்றார். (புறநா.2: 17-19) மதுரைக்காஞ்சியில் பாண்டியமன்னனின் அவையில் நாற்பெருங்குழு இருந்ததை,

**“தாமோளந் தோன்றிய நாற்பெருங்குழுவும்” (மதுரைக்.510)**

என்னும் பாடலடி உணர்த்துகின்றது. பாண்டியமன்னர்களின் அறநெறியைக் கண்டு ஐம்பெருங்குழு கூடிப் புகழ்ந்தமையை, (மதுரைக்.775-782) எனும் பாடலடிகள் விளக்குகின்றன. இங்கு, மன்னனின் செங்கோன்மை தகவலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## அறங்கூறுஅவையம்

நீதிமன்றத்திற்கு ‘அறங்கூறு அவையம்’ என்பது பழந்தமிழ்பெயர். அறம் கூறும் அவையத்தில் சான்றோர்கள் நேர்மையாகவும், உண்மை விளக்கும் நீதிபதியாகவும் இருந்தார்கள். மதுரைக்காஞ்சியில் அறங்கூறும் அவையத்தில் சான்றோர்கள் பலர் இருந்து நீதி வழங்கியமை


http://Creativecommons.org//license/by/4.0/.

சுட்டப்படுள்ளது. (மதுரைக்.161) பதிற்றுப்பத்தில் 'நாள் மகிழ் இருக்கை இனிது' (பதிற்.65:13) என்று குறிப்பிடப்பெற்றுள்ளமை சுட்டுதற்குரியது. சேரமன்னர்கள் தம் முன்னோர்களின் வழியில் அரசாட்சி செய்து மக்களுக்கு நீதிவழங்கியமையை,

**"முன்திணைமுதல்வர்போலநின்றுநீ**
**கெடாஅநல்லிசைநிலைஇத்"** (**பதிற்**:14:20-21)

என்னும் பாடலடிகள் நன்கு விளக்குகின்றன. சோழ நாட்டில் உறையூரில் அறங்கூறு அவையத்தில் சான்றோர்கள் இருந்து மக்களுக்கு நீதி உரைத்தமையைப் புறநானூறு,

**"……….சோழர்உறத்தைஅவையத்து**
**அறம்நின்றுநிலையிற்றுஆகலின்"** **(புறநா. 39: 8-9)**

என்று விளக்குகின்றது.

## மக்களுக்குச் சாதனங்களின் மூலம் தகவல் அறிவித்தல்

மக்கள் தொடர்பு என்பது தகவல் தொடர்புக்கென உருவாக்கப்பட்ட சாதனங்கள் மூலம் தகவலை மக்களுக்கு அறிவிக்கும் முறையாகும். பாண்டிய மன்னன் திருவிழாவினை அறிவிக்க முரசு ஒலித்து ஊர்ப்பொதுமக்களுக்குத் தகவல், அறிவித்தமை (மதுரைக்.362-363) மக்கள் தகவல் தொடர்பாக அமைகின்றது. பதிற்றுப்பத்தில், வெள்ளம் பெருகியவுடன் பறை அடித்து மக்களுக்கும், உழவர்களுக்கும் கரையை அடைக்க வருமாறு தகவல் அறிவித்தமையும் (பதிற்.22:28) மதம் பிடிக்கும் யானையை நீர்த்துறைக்குக் கொண்டு வரும் போது மக்கள் அங்கு செல்ல வேண்டாம் என்பதைப் பறை அடித்துத் தகவல் அறிவித்தமையும் (பொருநர்.171-172) பொதுத்தகவல் தொடர்பாக அமைந்துள்ளது.

## சொல் அல்லாத தொடர்பு

சங்கப்புறப் பாடல்களில் சொல் அல்லாத தகவல் தொடர்பாக,

1. இயற்கைவழித் தகவல்தொடர்பு (வானியல்வழித் தகவல் தொடர்பு)
2. செயற்கைவழித் தகவல்தொடர்பு

என இரு வகை தகவல் தொடர்புகள் காணப்படுகின்றன ."வாய்மொழி மற்றும் எழுத்து வடிவிலான சொற்கள் ஏதுமின்றி நடக்கின்ற தொடர்பு தான் சொல் அல்லாத தொடர்பு எனப்படுகிறது. மௌனமொழி அல்லது உடல்மாழி என்று அறியப்படும் சொல் அல்லாத தொடர்பானது முகபாவனை, கண்அசைவு, தோரணை, உடை, ஒப்பனை, சிரித்தல், கொட்டாவி விடுதல் என்பவற்றின் மூலம் நடைபெறுவதாகும்."[4] என்பர், எட்வின்எமரி.

## இயற்கைவழி தகவல்தொடர்பு

## இந்திரகோபப்பூச்சிகள்

இயற்கையாக நடக்கும் செயல்பாடுகளைக் கொண்டு



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

மக்கள் சில தகவல்களை அறிந்து கொண்டனர். இதனை, சிறுபாணாற்றுப்படையில், "பாணன் சீறி யாழுடன் மன்னனைக் கண்டு பரிசு பெற தன் சுற்றத்துடன் ஒவ்வொரு நிலத்தையும் கடந்து செல்கின்றான். முல்லை நிலத்தின் வழியாகச் செல்லும் போது அந்நிலத்தில் இந்திரக்கோபப் பூச்சிகள் ஊர்ந்து திரிந்தன. இதைக் கண்டவுடன் வறுமையில் இருந்த பாணனும் அங்கு வாழ்ந்த மக்களும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஏனென்றால், இந்திரக்கோபப் பூச்சிகள் ஊர்ந்தால் கார்காலம் வந்து விடும் .மழை பொழியும் .நாடு செழிப்படையும் என்பதை உணர்ந்ததால் வந்த மகிழ்வாகும்." (சிறுபாண். 167 - 169) இந்திரகோபப்பூச்சி இங்கு சொல் அல்லாத தொடர்பிற்குச் சிறந்த சான்றாகும்.

## பிச்சி அரும்புகள்

மகளிர் மாலைநேரத்தை அறிவிப்பதற்கு மேய்ச்சலுக்குச் சென்ற ஆநிரைகள் திரும்பவருதல், மலர்கள் மலர்ந்து மணம்வீசுதல் போன்றவை துணையாக இருந்துள்ளன. இதனை, மக்கள் வழிபாடு செய்வதற்கு மாலைநேரத்தைப் பார்த்துக் காத்திருந்தார்கள். பிச்சிமொட்டுகள் மலர்ந்து மணம்வீசும் வாசம் வந்தவுடன் மாலைநேரம் வந்தமை அறிந்து இறைவனுக்கு வழிபாடு செய்தமையை(நெடுநல்.40-41) உணர்த்துகின்றன. இதில், இயற்கையாக மலர்கள் மாலைப்பொழுதில் மலர்ந்து மணம்வீசுதல் - பொழுதை அறிவிக்கும் கருவியாக சொல் அல்லாத தொடர்பிற்குச் சான்றாக விளங்குகிறது.

## இயற்கைவழி தகவல் தொடர்பு - வானியல்வழி தகவல் தொடர்பு

வானில் தோன்றும் கோள்களாகிய சூரியன், சந்திரன், உரோகினி, சனி, வெள்ளிமீன் குறித்த செய்திகள் இயற்கை, மனிதர்களுக்கு உணர்த்தும் தகவல் தொடர்புகளாகும்.

## வெள்ளி

வெள்ளி என்னும் மீன், மழைக்கோளாகும். மழைபெய்வதற்குக் காரணமாக இருக்கும் வெள்ளியை 'சீர்சால் வெள்ளி' (பதிற்.24:24)என்று பதிற்றுப்பத்து பதிவு செய்கிறது. இவ்வெள்ளி, வடப்பக்கத்தச் செல்லுமாயின் மழை பெய்யும் என்பதை,

"**நிலம் பயம் பொழிய சுடர்சினம்தணிய**
**மயங்கெழு வெள்ளி ஆநியம் நிற்ப"** **(பதிற்:69:13-14)**

எனும் பாடலடிகள் விளக்குகின்றன. இதைப்போல, வெள்ளிக்கோள் தெற்கு நோக்கிச் சென்றால் மழை பெய்யாமையை,

" **வசைஇல் புகழ் வயங்கு வெண்மீன்**
**திசைதிரிந்து தெற்கு ஏகினும்"(பட்டினப்.1-2)**

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

## செயற்கைவழி தகவல் தொடர்பு

## கலங்கரை விளக்கம்


http://Creativecommons.org//license/by/4.0/.

கலங்கரை விளக்கம் என்பது, கடலிலிருந்து வரும் கப்பல்களுக்கும் மரக்கலங்களுக்கும் வழிகாட்டும் முகமாக அமைக்கப்படுகிறது. கலங்கரை விளக்கம், கடலிலிருந்து வரும் கப்பல்களுக்கும், மரக்கலங்களுக்கும் இரவுநேரத்தில் வழிதெரியாது திசைதப்பிச் செல்லாமல் நாம்செல்ல வேண்டிய வழியைக் காட்டுவதாக அமையப்பெற்றுள்ளது. (பெரும்பாண்.346-357)இதில், கலங்கரை விளக்கின் ஒளியானது வணிகர்களுக்கு வழியை அறிவிக்கும் தகவலாக விளங்குகிறது.

## நடுகல்

போரில் செயற்கரிய செயல் செய்து வீரமரணம் அடைந்த வீரனுக்கு நடுகல் நட்டு வணங்கும் மரபு இருந்தது. நடுகல் என்பது, நடப்பட்டகல் ஆகும். நடுகல்லைத் தமிழர்கள் வீரக்கல் என்றும் குறிப்பர். சங்கப் புறப்பாடல்களில் நடுகற்கள் பற்றி 20பாடல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. மலைபடுகடாமில் நடுகல்லின் அமைப்பு முறை குறித்து, “ஒரு பாணர் இன்னொரு பாணனை ஆற்றுப்படுத்தும் போது, நீ போகும் வழியில் மாமரத்தின் நிழலில் ஒருநடுகல் நடப்பட்டிருக்கும். அந்த நடுகல்லில் இன்னனுடைய நடுகல் இன்ன செயலுக்காக இது நடப்பட்டது என்றும் குறிக்கப்பெற்றிருக்கும்.” (மலைபடு.394-397) என்ற தகவல் இடம்பெற்றுள்ளது. ஒரு மறவன் தன் ஆநிரைகளை கவர்ந்து சென்ற பகைவரை வென்று ஆநிரையை மீட்டான். அப்படிப்பட்ட வீரன் உயிர் நீத்தான். சான்றோர்கள் பலர் நடுகல்லை நட்டு அவனுடைய பெயரும் பீடும் எழுதி, மயிற்பீலியும், பூமாலையும் சூட்டி வழிபட்டமையை, (புறநா.264:5-6)(புறநா.261)உணர்த்துகின்றன.

## கொடிகள்

வணிகர்கள் தங்கள் அங்காடிகளில் இன்ன இன்ன பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை அறிவிக்க ,அங்காடிகளுக்கு வெளியே கொடிகளை நட்டு வைத்தனர். இக்கொடிகள் சொல் அல்லாத தகவல் தொடர்பாக அமைந்துள்ளது. பதிற்றுப்பத்தில், கடை வீதிகளிலுள்ள கொடிகள் பொருட்களை அறிவித்ததை,

**“கொடிநிழல்பட்டபொன்னுடைநியமத்து”** **(பதிற்.15:23)**

எனும் அடிகள் விளக்குகின்றன. மதுரைக்காஞ்சியில், “திருவிழாக்களை நிகழ்த்துவதற்கு எடுத்த அழகிய பல கொடிகள் ஒரு பக்கம் அசைந்து கொண்டிருந்தன. பகைவர்களின் அரிய அரண்களை வெற்றி கொண்டமைக்காக வெற்றி குறித்த கொடிகள் மற்றொரு பக்கம் அசைந்து கொண்டிருந்தன. கள் விற்பனைக்கு எடுத்த கொடிகள் ஒரு புறம் அசைந்து கொண்டிருந்தன. கல்வி, அறம், கொடை போன்ற நல்வினை செய்வோர் எடுத்த கொடிகள் மற்றொரு புறம் அசைந்து கொண்டிருந்தன” (மதுரைக்.365-374) இதன் வழி பாண்டிய நாட்டு வணிக முறை, அரசனின் வெற்றிச் சிறப்பு போன்றவை சொல் அல்லாத தகவல் தொடர்பாகப் பெறப்படுகிறது. இதே போன்று காவிரிப்பூம்பட்டனத்திலும் அங்காடிகளின் மேல் கொடிகள் பறந்தமையை,

**“மையறுசிறப்பின்தெய்வம்சேர்த்திய**
**மலர்அணிவாயில்பலர்தொழுகொடியும்..........................................**


http://Creativecommons.org//license/by/4.0/.

**MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.**

**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.**

**VOLUME – III** **ISSUE - II**

FEB – 2026 **E-ISSN : 2584 – 1238**

**செல்கதிர்நுழையாச்செழுநகாவரைப்பின்"(பட்டினப்.159-183)**

எனும் பட்டினப்பாலை பாடலடிகள் விளக்குகின்றன. இதில் சோழநாட்டின் செல்வவளம் சொல் அல்லாத தொடர்பாக அமைந்துள்ளது. திருமுருகாற்றுப்படையில், "போரைக் கருதி வருவார்க்கு அச்சம் உணர்த்துமாறு மன்னனின் அரண்மனையின் முன் வானளாவிய உயர்ந்த கொடிபறந்தமை" (திருமுருகு.67-68) அரசனின் வீரத்தைப் புலப்படுத்தும் தகவலாக உள்ளது.

## எதிர்மறைத் தொடர்பு

சங்கப் புறப்பாடல்களில் எதிர்மறைத்தொடர்பாக பழிச்சொல் இடம்பெற்றுள்ளது. சங்கப்புறப்பாடல்களில் பகைவர்கள் தங்களை இழிவு செய்தமையை அறிந்த மன்னர்கள் அவர்களைப் போரிட்டு வெல்வேன். இல்லையென்றால், தமக்கும் தம் குடிக்கும் பழிச்சொல் வரும் என்று உரைத்தமை எதிர்மறைத் தொடர்பாக அமைந்துள்ளது."பாண்டியன் நெடுஞ்செழியனைப் பகைவர்கள், அவன் மிகவும் இளையவன் என்றும்அவனுடைய நாட்டை உயர்வாகப் புகழும் புலவர்கள் எங்கள் நகைப்பிற்கு ஒப்பானவர்கள் என்றும் மன்னரின் மனம்வருந்துமாறு நகைத்தார்கள். இதனைக் கேட்டபாண்டியமன்னன் சினம்கொண்டு, தம்மை இழிவாகப் பேசியவர்களின் தலைகளைச் சிதறுமாறு செய்து வெற்றி பெறுவேன். அப்படியில்லையாயின், என் நாட்டுமக்கள் என்னைக் கொடியவன் எனப் பழிக்கட்டும். என்னையும் என்நாட்டையும் புகழ்ந்துபாடும் புலவர்கள்பாடாது போகட்டும். என்னால் காக்கப்படும் சுற்றத்தார் துன்பமடைந்து இரந்து கேட்கும்போது தரஇயலா கொடியோன் எனப் பழிக்கட்டும்" (புறநா.72)என்றுரைத்தமை எதிர்மறைத் தகவல் தொடர்பாக அமைந்துள்ளது.

பூதப்பாண்டியனைப் பகைவர்கள் இழிவுபடுத்திய போது, சினம் கொண்ட மன்னன் "பகைவர்களைப் போரில் பயந்து ஓடுமாறு போரிட்டு வெற்றி கொள்வேன். இல்லையென்றால், எம் பெருந்தேவியை விட்டு நீங்கியவனாக, அறம் நிலைபெற்ற அவைக்களத்தில் நீதிநெறி தவறிய மன்னன் என மக்கள் பழிக்கட்டும்" (புறநா.70:73) எனவுரைப்பன, வீரமொழி பேசி மன்னனின் ஆண்மையை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. பழிச்சொல்லுக்கு அஞ்சிய மன்னர்களின் உணர்வு இதில் தகவலாக அமைந்துள்ளது.

## தொகுப்புரை

சங்கப் புறப்பாடல்களில் சொல்வழி தகவல் தொடர்பானது, இரு நபர்களிடைத் தொடர்பு, குழுத் தொடர்பு, மக்கள் தகவல் தொடர்பு ஆகிய மூன்று நிலைகளில் அமைந்ததைக் காண இயலுகிறது. சங்கப்புறப்பாடல்களில்சொல் அல்லாததகவல்தொடர்பாக, இயற்கைவழிதகவல்தொடர்பு (வானியல்வழிதகவல்தொடர்பு), செயற்கைவழிதகவல்தொடர்புஎனஇருவகை தகவல்தொடர்புகள்அமைந்திருந்தமையை சான்றாதாரங்கள் வழி உணரமுடிகிறது. சங்கப் புறப்பாடல்களில் எதிர்மறைத்தொடர்பாக பழிச்சொல் இடம்பெற்றுள்ளமையும் இவ்வியலில் தெளிவாகிறது. இவ்வாறாக, சொல்வழி - சொல் அல்லாத தொடர்புகள், கருத்துப்பரிமாற்றத்திற்கு எளிமையாக இருந்தமை சங்கப் புறப்பாடல்கள் வழிஇவ்வியலில் தெளிவாகியுள்ளன.



http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

## அடிக்குறிப்புகள்

1. சிவ.சசிரேகா, (கம்பன் காவியத்தில் தகவல் தொடர்பு (கட்.), இ.த.ப.மன்ற கருத்தரங்க ஆய்வுக்கோவை, தொகுதி-1,ப.447
2. மேலது, ப.448
3. சிவ.சசிரேகா,தகவல் தொடர்பு மாதிரிகளும் கோட்பாடுகளும், ப.3
4. சிவ.சசிரேகா, திருக்குறளில் சொல் அல்லாத் தொடர்பு (கட்.), 35-வது இ.த.ப. ஆய்வுக்கோவை, தொகுதி-2, ப.520.

## துணைநூற்பட்டியல்

1. அமிர்த கௌரி, ஆ., - சங்க இலக்கியத்தில் உரையாடல், கவின்கலை அச்சகம், சென்னை - 41.முதல் பதிப்பு - டிசம்பர், 1989.
2. இராசா, கி., - மக்கள் தகவல் தொடர்பியல் - அறிமுகம், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை. முதல் பதிப்பு - 2003.
3. எழிலழகன், எஸ்.பி., - செய்தி உலகம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட், சென்னை - 98,முதல் பதிப்பு - மார்ச், 2016.
4. கிருட்டிணசாமி, வெ., - தகவல் தொடர்பியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 08.முதல் பதிப்பு - ஆகஸ்ட், 2001.
5. சிங்கார வடிவேலன், அர.,- சங்க இலக்கிய உவமைகள், பழநியப்பன் பதிப்பகம், தேவக்கோட்டை,1986.
6. சுப்பிரமணியன், ந., - சங்ககால வாழ்வியல், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட், சென்னை - 98,2010.
7. நல்லதம்பி, வெ., - தமிழர் வாழ்வில் தகவலியல், வையவி பதிப்பகம்,சென்னை - 42,முதல் பதிப்பு - 2013.
8. பூரணச்சந்திரன், க., - தொடர்பியல் - சமூகம் - வாழ்க்கை, அடையாளம் பதிப்பகம்,முதல் பதிப்பு - 2011.


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

திருச்சி - 621310,

9. மருதநாயகம், இரா., - இருபத்தோராம் நூற்றாண்டில் மக்கள் தகவல் தொடர்பியல், பாவை பிரிண்டர்ஸ், முதல் பதிப்பு, 2015.சென்னை - 14.


http://Creativecommons.org//license/by/4.0/.